# அகத்தியர் திருநாள் -2018

யாழ்பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறை 5ம் வருடமாணவர்களினால் முதன்முதலாக **“அகத்தியர் திருநாள்”** அவர் பிறந்த தினமான மார்கழி ஆயிலிய நட்சத்திரத்தன்று 04.01.2017 அன்று சித்த மருத்துவத்துறை கேட்போர்கூடத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந் நிகழ்வின் முதன்மை விருந்தினராக Dr. (திருமதி) வி. சத்தியசீலன், தலைவர், சித்தமருத்துவ அலகு, யாழ்பல்கலைக்கழகம், சிறப்பு விருந்தினராக Dr. (திருமதி) பி.சிவசண்முகராஜா பொறுப்பு வைத்திய அதிகாரி, சித்த போதனாவைத்தியசாலை, கைதடி, மற்றும் கௌரவ விருந்தினர்களாக Dr. கு. யோகானந்தராசா நவலோக சித்த வைத்தியசாலை, கிராமக்கோடு, பருத்தித்துறை, திருமதி.சு. யோகசுந்தரம் சுந்தரம் மருந்துக்கடைக் கடை, மருந்துக்கடை, மணல்தறை ஒழுங்கை, யாழ்ப்பாணம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்வின் முதல் நிதழ்வான அகத்தியர் சிலைக்கு முன்பாக பொங்கல் பொங்கி படையல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து சித்தர் வணக்கப்பாடல் இசைக்கப்பட்டதை அடுத்து மங்கல விளக்கேற்றல் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து வரவேற்பு நடனமும் அடுத்து ரிசி தொண்டுநாத சுவாமிகளின் (கவாய் சைவ ஆதினம், அமெரிக்கா) ஆசியுரையை அடுத்து தலைமையுரை, பிரதமவிருந்தினர் உரை என்பனவற்றுடன் கலை நிகழ்வுகளும் நடைபெற்று இறுதியாக நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.


















சித்தர்




சித்தர் திருநாள்
கஅ(2018)

